## ஜனவரி – 20 – சனி

**புனித செபஸ்தியார்**

**உனது மாட்சி உன் மலைகளிலே மாண்டு கிடக்கின்றது!**

**2 சாமு 1:19**

---

### முதல் வாசகம்: 2 சாமுவேல் 1:1 – 4,11–12,19, 23-27

சவுல் இறந்தபின், அமலேக்கியரைத் தோற்கடித்து திரும்புகையில் தாவீது சிக்லாஇல் இரண்டு நாள் தங்கினார். மூன்றாம் நாள், சவுலின் பாசறையிலிருந்து கிழிந்த ஆடைகளோடும் புழுதிபடிந்த தலையோடும் ஒருவன் வந்தான். அவன் தாவீதிடம் வந்ததும், தரையில் வீழ்ந்து வணங்கினான். ”நீ எங்கிருந்து வருகிறாய்? என்று தாவீது அவனை வினவ, ”நான் இஸ்ரயேல் பாசறையினின்று தப்பி வந்துவிட்டேன்” என்று அவன் பதில் கூறினான். ”என்ன நடந்தது? என்னிடம் சொல், என்று தாவீது கேட்க, ”அவன் வீரர்கள் போரினின்று ஓடிவிட்டனர் அவர்களுள் பலர் வீழ்ந்து மடிந்து விட்டனர் சவுலும் அவருடைய மகன் யோனத்தானும் இறந்துவிட்டனர்” என்று கூறினான். தாவீது தம் ஆடைகளை பற்றிக் கிழித்தார். அவரோடு இருந்தவர்களும் அவ்வாறே செய்தனர். சவுலுக்காகவும் அவருடைய மகன் யோனத்தானுக்காகவும் ஆண்டவரின் மக்களுக்காகவும் இஸ்ரயேல் வீட்டாருக்காகவும் அவர்கள் அழுது புலம்பி மாலை வரை நோன்பு இருந்தார்கள். ஏனெனில் அவர்கள் வாளால் மடிந்துவிட்டார்களள. 9 ”இஸ்ரயேல்! உனது மாட்சி உனது மலைகளிலே மாண்டு கிடக்கிறது! மாவீரர் எவ்வாறு மடிந்தனர்!. சவுல்! யோனத்தான்! அன்புடையார், அருளுடையார்! வாழ்விலும் சாவிலும் இணைப்பிரியார்! கழுகினும் அவர்கள் விரைந்து செல்வர்! அரியினும் அவர்கள் வலிமைமிக்கோர்! இஸ்ரயேல் புதல்வியரே! சவுலுக்காக அழுங்கள்! செந்நிற மென்துகிலால் உங்களை உடுத்தியவர் அவரே! பொன்னின் நகைகளினால் உம் உடைகளை ஒளிரச் செய்தாரே! போர் முனையில் வீரர் எங்ஙனம் வீழ்ந்துபட்டனர்! உன் மலைகளிலே யோனத்தான் மாண்டு கிடக்கின்றான்! சகோதரன் யோனத்தான்! உனக்காக என் உளம் உடைந்து போனது! எனக்கு உவகை அளித்தவன் நீ! என் மீது பொழிந்த பேரன்பை என்னென்பேன்! அது மகளிரின் காதலையும் மிஞ்சியது அன்றோ! மாவீரர் எவ்வாறு மடிந்தனர்! போர்க்கலன்கள் எங்ஙனம் அழிந்தன!

**பதில்பாடல் :** ஆண்டவரே எம்மை மீட்குமாறு உம் முக ஒளியைக் காட்டியருளும்.

### நற்செய்தி : மாற்கு 3 : 20 - 21

அக்காலத்தில் இயேசு வீட்டிற்குச் சென்றார். மீண்டும் மக்கள் கூட்டம் வந்து கூடியதால் அவர்கள் உணவு அருந்தவும் முடியவில்லை. அவருடைய உறவினர் இதைக் கேள்விப்பட்டு, அவரைப் பிடித்துக்கொண்டுவரச் சென்றார்கள். ஏனெனில் அவர் மதிமயங்கி இருக்கிறார் என்று மக்கள் பேசிக் கொண்டனர்.

**தியானம்:** நாம் கடவுளின் பிளைகளாக வாழவேண்டும். இன்று அழிக்கப்பட முடியாதவர்கள் எல்லம் அழிந்துவிட்டார்கள், அழிந்து கொண்டு இருக்கிறார்கள். என்ன நடக்கும் என்று யாருக்கும் தெரியாது. கொடி கட்டிப் பறந்தவர்கள் விலாசமே இல்லாமல் காணாமல் போய்விட்டார்கள். இறைவனால் அருட்பொழிவு செய்யப்பட்டவர் சவுல். கடவுள் அவருக்கு எல்லா நன்மைகளையும் கொடுத்திருந்தார். அந்த இறுமாப்பு அவரை அழிவின் பாதையில் கொண்டு சென்றதை இன்றைய முதல் வாசகத்தில் நாம் பார்க்கிறோம். தன்னை விட மக்கள் தாவீதை புகழ்ந்ததை அவர் விரும்பவில்லை. பொறாமை அவரின் உயிரை பறித்தது. இன்று உலக நாடுகளில் போட்டி. மதத்தின் பெயரால் வன்முறைகள் நிறைந்து காணப்படுகிறது. ஏன்? பொதுவாக போட்டி மனப்பான்மை இருக்க வேண்டும் ஆனால் பொறாமை இருக்கக்கூடாது என்பார்கள். போட்டி ஒருவரை வளர்க்கும் ஆனால் பொறாமை அழித்துவிடும் என்பதற்கு இன்றைய முதல் வாசகம் ஒரு எடுத்துக்காட்டு. அவ்வாறே யேசுவை தேடி மக்கள் கூட்டம் வருவதை சமுதாயத்தலைவர்கள் பொறாமையுடன் பார்த்தார்கள். அதனால்தான் அவரை பல வழிகளில் விமர்சித்தார்கள். எப்படியாவது மக்கள் யேசுவை வெறுக்க வேண்டும் என்று நினைத்தார்கள். அதற்காக பல குறுக்கு வழிகளை கையாண்டார்கள். இதனை இன்றைய நற்செய்தியில் நாம் பார்க்கலாம்.பேய் பிடித்திருக்கிறது என்றார்கள். நல்லதை ஏற்க அவர்கள் தயாராக இல்லை. நாம் எப்படி? சிந்திப்போம்.